ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.7 – பண்டை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 5.7 – பண்டை

‡ பண்டை நான்மறையும் வேள்வியும் ⋆
கேள்விப் பதங்களும் பதங்களின் பொருளும் ⋆
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி அனலும் ⋆
பெருகிய புனலொடு நிலனும் ⋆
கொண்டல் மாருதமும் குரை கடல் ஏழும் ⋆
ஏழு மா மலைகளும் விசும்பும் ⋆
அண்டமும் தானாய் நின்ற எம் பெருமான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.1** ॥

இந்திரன் பிரமன் ஈசன் என்றிவர்கள் ⋆
எண் இல் பல் குணங்களே இயற்ற ⋆
தந்தையும் தாயும் மக்களும் மிக்க சுற்றமும் ⋆
சுற்றி நின்றகலாப் பந்தமும் ⋆
பந்தம் அறுப்பதோர் மருந்தும் பான்மையும் ⋆
பல் உயிர்க்கெல்லாம் ⋆
அந்தமும் வாழ்வும் ஆய எம் பெருமான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.2** ॥

மன்னு மா நிலனும் மலைகளும் கடலும் ⋆
வானமும் தானவர் உலகும் ⋆
துன்னு மா இருளாய்த் துலங்கொளி சுருங்கித் ⋆
தொல்லை நான்மறைகளும் மறைய ⋆
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப் ⋆

பிறங்கிருள் நிறம் கெட ⋆
ஒரு நாள் அன்னமாய் அன்றங்கரு மறை பயந்தான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.3** ॥

மா இருங்குன்றம் ஒன்று மத்தாக ⋆
மாசுணம் அதனொடும் அளவி ⋆
பா இரும் பௌவம் பகடு விண்டலறப் ⋆
படு திரை விசும்பிடைப் படர ⋆
சேய் இரு விசும்பும் திங்களும் சுடரும் ⋆
தேவரும் தாம் உடன் திசைப்ப ⋆
ஆயிரம் தோளால் அலை கடல் கடைந்தான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.4** ॥

எங்ஙனே உய்வர் தானவர் நினைந்தால் ⋆
இரணியன் இலங்கு பூண் அகலம் ⋆
பொங்கு வெம் குருதி பொன் மலை பிளந்து ⋆
பொழி தரும் அருவி ஒத்திழிய ⋆
வெங்கண் வாள் எயிற்றோர் வெள்ளி மா விலங்கல் ⋆
விண்ணுறக் கனல் விழித்தெழுந்தது ⋆
அங்ஙனே ஒக்க அரி உரு ஆனான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.5** ॥

ஆயிரம் குன்றம் சென்று தொக்கனைய ⋆
அடல் புரை எழில் திகழ் திரள் தோள் ⋆
ஆயிரம் துணிய அடல் மழுப் பற்றி ⋆
மற்றவன் அகல் விசும்பணைய ⋆
ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச ⋆
அறி துயில் அலை கடல் நடுவே ⋆

ஆயிரம் சுடர் வாய் அரவணைத் துயின்றான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.6** ॥

சுரி குழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த ⋆
கொடுமையிற் கடு விசை அரக்கன் ⋆
எரிவிழித்திலங்கு மணி முடி பொடி செய்து ⋆
இலங்கை பாழ் படுப்பதற்கெண்ணி ⋆
வரி சிலை வளைய அடுசரம் துரந்து ⋆
மறி கடல் நெறிபட ⋆
மலையால் அரி குலம் பணி கொண்டலை கடல் அடைத்தான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.7** ॥

ஊழி ஆய் ஓமத்துச்சி ஆய் ⋆
ஒரு கால் உடைய தேர் ஒருவனாய் ⋆
உலகில் சூழி மால் யானைத் துயர் கெடுத்து ⋆
இலங்கை மலங்க அன்றடு சரம் துரந்து ⋆
பாழியால் மிக்க பார்த்தனுக்கருளிப் ⋆
பகலவன் ஒளி கெட ⋆
பகலே ஆழியால் அன்றங்காழியை மறைத்தான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.8** ॥

பேயினார் முலை ஊண் பிள்ளை ஆய் ⋆
ஒரு கால் பெரு நிலம் விழுங்கி ⋆
அதுமிழ்ந்த வாயனாய் மாலாய் ஆல் இலை வளர்ந்து ⋆
மணி முடி வானவர் தமக்குச் சேயனாய் ⋆
அடியேற்கணியனாய் வந்து ⋆
என் சிந்தையுள் வெம் துயர் அறுக்கும் ⋆

ஆயனாய் அன்று குன்றம் ஒன்றெடுத்தான் ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானே ॥ **5.7.9** ॥

‡ பொன்னும் மா மணியும் முத்தமும் சுமந்த ⋆
பொரு திரை மா நதி புடை சூழ்ந்து ⋆
அன்னமாடுலவும் அலை புனல் சூழ்ந்த ⋆
அரங்க மா நகர் அமர்ந்தானை ⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன் ⋆
மான வேற் கலியன் வாய் ஒலிகள் ⋆
பன்னிய பனுவல் பாடுவார் ⋆
நாளும் பழவினை பற்றறுப்பாரே ॥ **5.7.10** ॥

அடிவரவு — பண்டை இந்திரன் மன்னு மாயிரும் எங்ஙனே ஆயிரம் சுரி ஊழி பேயினார் பொன்னும் ஏழை

பண்டை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்